2002 மே 7]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறு ஆய்வு செய்யப்பட்டு, நிதியாதாரத்தைப் பொறுத்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 291, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர்.*

291—

சாலையைப் புதுப்பித்தல்

***5131—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, தரணி சர்க்கரை ஆலை அருகில் தென்புறம் சுமார் 7 கி.மீ. வரையுள்ள சாலை மிகவும் பழுதடைந்துள்ளதைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. ரா. ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலை மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக 1987-ல் போடப்பட்டது. அதற்குப்பிறகு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ரெகுலராக நெடுஞ்சாலைத் துறையால் எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்தச் சாலை, தரணி சர்க்கரை ஆலைக்கு அருகில் உள்ளது. விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள 8 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள கரும்புகள் பூராவும் தினம் 3 ஆயிரம் டன் அந்த வழியாகத்தான் போக வேண்டி இருக்கிறது. ஆகையினால், மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலைனை செய்து அந்த 7 கி.மீ. தூரம் உள்ள சாலையை*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

எடுத்தால்தான் சரியாக இருக்கும். இந்தச் சாலையைச் செப்பனிட்டு சுமார் 15 வருடங்கள் ஆகின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்தான் ரெகுலராக நெடுஞ்சாலைத் துறையால் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆக இந்த 8 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள கரும்புகள் முழுவதையும் தினம் 3 ஆயிரம் டன் அந்த வழியாக விவசாயிகள் எடுத்துப்போகிறார்கள். அந்தந்தத் தொகுதியில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களைப்பற்றி அங்கே வாகனங்களில் போகிறபோதுகூட பேசக்கூடிய நிலைமையில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இதற்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாக நிதி வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியுள்ள அந்தச் சாலை கி.மீ. 0/0—7/8 என்னும் இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலை 1990 ஆம் ஆண்டு மேற்குத் தொடர்ச்சி மலை சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டது. இச்சாலை 1-4-2001 முதல் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளாக இச்சாலை பராமரிப்பு இல்லாமல் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்த விவரம் அரசுக்கு வரப்பெற்றிருக்கிறது. இச்சாலையை மேம்பாடு செய்வதற்காக ரூபாய் 65 இலட்சத்திற்குத் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக்கூறியதுபோல அவசர அவசியம் கருதி இந்தச் சாலைக்கு முன்னுரிமை கொடுத்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரா. ஈஸ்வரன்.

திரு. ரா. ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலநேரங்களில் விவசாயிகள் எல்லோருமே ஒன்று சேர்ந்து இந்தச் சாலையினை உடனடியாகப் போட வேண்டுமென்று உண்ணாவிரதம், சாலை மறியல், போராட்டம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஈஸ்வரன், அமைச்சர் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்கிறார்.

திரு. ரா. ஈஸ்வரன்: இருந்தாலும், இது இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், வாசுதேவநல்லூர், தென்காசி, கடையநல்லூர்,

2002 மே 7]

சங்கரன்கோவில், போன்ற எட்டு சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள விவசாயிகள் கடுமையாக என்னிடம் வற்புறுத்துகிறார்கள். ஆகவே, எக்காரணத்தைக் கொண்டும் காலத்தை நீட்டிக்காமல் அதற்கு முன்னுரிமை கொடுத்து எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, முன்னுரிமை கொடுத்து எடுக்க வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 292, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

292—

பல்தொழில்நுட்பப் பயிலகம்

***438—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புரசைவாக்கம் தொகுதியில் ஓட்டேரி பகுதியில் அமைந்துள்ள பல்தொழில்நுட்ப தொழிற்கல்வி நிலையம் எப்போது கட்டி முடிக்கப்படும்?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புரசைவாக்கம், அரசினர் Polytechnic கட்டடமானது மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு கட்டப்பட்டு வருகிறது. இதில் முதல் கட்டப் பணிகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புரசைவாக்கம் ஓட்டேரி பகுதியில் அமைந்துள்ள அரசினர் Polytechnic, பணிகள் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டு, இதுவரையில் முழுமையாக்க் கட்டி முடிக்கப்படவில்லை. அதேநேரத்தில் அந்த Polytechnic-ல் மாணவர்களைச் சேர்த்து அடையாறு பகுதியிலுள்ள மத்திய